SPECIAL MOM 2018
SRI ARUNODAYAM'S TRIBUTE TO GREAT MOTHERS

SRI ARUNODAYAM
Home for Mentally Challenged Destitute

**பெருமையும் தனித்தன்மையும் வாய்ந்த சிறப்பு அன்னையர் 2018 ஆண்டுக்கான விருதைப் பெறும் 15 சிறப்பு அன்னையர்களை ஸ்ரீ அருணோதயம் அறக்கட்டளை தேர்ந்தெடுத்து வெளியிட்டுள்ளது.**

கொளத்தூர், சென்னை, இந்தியா - மே 3, 2018:

இந்த ஆண்டுக்கான சிறப்பு அன்னையர் விருது பெறத் தேர்வானவர்களின் பட்டியலை பெருமையோடு அறிவித்திருக்கிறது ஸ்ரீ அருணோதயம் அறக்கட்டளை. இதில் தேர்வான அன்னையர்கள் சிறப்புக்குழந்தைகளைப் பெற்று அவர்களை நன்றாகப் பராமரிப்பவர்கள். கிட்டத்தட்ட 100 விண்ணப்பங்கள் தென் இந்தியா முழுவதிலும் இருந்து பெறப்பட்டது. சமுதாயத்தில் முக்கியப் பொறுப்புக்களை வகிக்கும் சான்றோரால் அவை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட பதினைந்து பேர் தெர்ந்தெடுக்கப்பட்டனர்.

சிறப்புக்குழந்தைகளை பெற்றெடுத்த அன்னையர் அந்த சமூகத்துக்கும் வீட்டுக்கும் ஆற்றும் பங்கினையும் அவர்களது மதிப்பையும் உயர்த்தும் பொருட்டு சென்ற ஆண்டு இந்த விருது முதல் முதலில் அறிவிக்கப்பட்டது . சிறப்புக்குழந்தைகளுக்கு நல்ல வழிகாட்டியாக அவர்களது வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்கும் திறமையும் தகுதியும் உள்ள அன்னையரைக் கண்டறிவதே இதன் நோக்கம் . அந்த அன்னையர் சமூகத்துக்கு ஒரு முன் மாதிரியாக இருக்கிறார்கள். அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு இந்த விருது அத்தகைய அன்னையர்க்கு வழங்கப்படுகிறது.

2018ஆம் ஆண்டின் விருது பெறுபவர்கள்:

1. **அனுராதா கே** - லீலாவின் (20 வயது )தாய், சென்னை.
2. **ஜெயாரா** - இம்ரான் (20 வயது), ஜமாலியா (18 வயது) இவர்களின் தாய், சென்னை.
3. **கலைச் செல்வி** - வசந்த குமாரின் (17 வயது )தாய், கடலூர்.
4. **கமலா வி** - கோகுலின் (32 வயது) தாய், சென்னை.
5. **கன்னி செல்வி ஜி** - இசக்கி முத்து (22 வயது) மற்றும் மேகலாவின் (18 வயது) தாய்,

சென்னை.

6. ***கிருஷ்ண வேணி ஜி*** - கோகுல கிருஷ்ணன் (37 வயது )மற்றும் லிகேஷ் சர்மா (31 வயது) இவர்களின் தாய், சென்னை.

7. ***லலிதா தேவி சிம்ம கூர்த்தி*** -பரத் குமாரின் (22 வயது )தாய், ஓங்கோல் ஆந்திரப் பிரதேசம்

8. ***மீரா பால சந்தர்*** - கிருஷ்ணாவின் (41 வயது) தாய், சென்னை

9. ***முருகேஸ்வரி டி*** - திவ்யாவின் (23 வயது )தாய், மதுரை

10. ***பிரேமாவதி பாய்*** - மேகலாவின் (37 வயது) தாய், கும்பகோணம்.

11. ***செந்தமிழ் செல்வி*** - தினேஷ் (28 வயது) பாலு (25 வயது) இவர்களின் தாய் சென்னை.

12. ***சாரதா தேவி*** - கணேஷ் குமாரின் ( வயது 31) தாய், சென்னை.

13. ***உஷாராணி*** - சண்முகப்பிரியா (வயது 23) பத்மப் பிரியா (வயது 20) இவர்களின் தாய், சென்னை

14. ***வேத வல்லி வி*** - சுரேஷ் (31 வயது), கஸ்தூரி (30 வயது) மற்றும் பிரகாஷ் (29 வயது) இவர்களின் தாய், சென்னை.

15. ***விஷாலி கெம்மிசெட்டி*** - மல்லிகா (வயது14 ) மதுலிகா (வயது 8) இவர்களின் தாய், வாராங்கல் தெலுங்கானா

வெற்றி பெற்றவர்களுக்கு 13.5.2018 அன்னையர் தினத்தன்று சென்னையில் நடைபெற இருக்கும் விழாவில் விருது வழங்கப்பட உள்ளது. அந்த விழாவில் ஸ்ரீ அருணோதயம் அறக்கட்டளையின் நீண்ட நாள் நன்கோடையாளர்கள் கீழ்க்கண்ட பட்டியலில் உள்ள பொருட்களை வெற்றி பெற்றவர்களுக்கு வழங்கி மரியாதை செய்வார்கள்.

(1) சிறப்பு நற் சான்றிதழ் மற்றும் கோப்பை

(2) ரூ 15,000 பண முடிப்பு

(3) பரிசுப் பெட்டி

(4) ஸ்ரீ அருணோதயம் வழங்கும் சிறப்புக்குழந்தைகளுக்குத் தேவையான உதவிகளை வாழ் நாள் முழுவதும் இலவசமாகப் பெற உதவும் ஒரு பாஸ் .

ஆகியவை வழங்கப்பட உள்ளன.

இந்த விருதின் நோக்கம் இந்தியா முழுவதும் உள்ள சிறப்புக்குழந்தைகளை ஈன்ற அன்னையர்க்கு நம்பிக்கையும், தங்கள் சிறப்புக்குழந்தைகளின் மேல் எந்த எதிர்பார்ப்பும் இல்லாத அன்பையும் கவனிப்பையும் வழங்கி நல்ல குடும்ப சூழ்நிலையையும் அவர்களுக்கு அளிக்க அன்னையரை ஊக்கப்படுத்துவதே ஆகும்.

ஸ்ரீ அருணோதயம் வழங்கும் சிறப்பு அன்னையர் விருதினைக் குறித்து:

ஸ்ரீ அருணோதயம் அறக்கட்டளை வழங்கும் இந்த விருது தனித்தன்மை உடையது மட்டுமல்ல இந்தியாவில் சிறப்புக் குழந்தைகளையும் அவர்களது அன்னையரையும் கௌரவிக்கும் விருது அறிவிக்கப்படுவதும் இதுவே முதல் முறை.

இந்த விருதினைக் குறித்த முதல் சிந்தனை 2016 ஆண்டில் தோன்றிய போது ,சிறப்புக்குழந்தைகள் அவர்களதுகுடும்பங்கள் குறித்த சமூகத்தின் கண்ணோட்டத்தையும் கருத்தையும் மாற்ற வேண்டும் என்பதே குறிக்கோளாக இருந்தது. பொதுவாகவே இத்தகைய குழந்தைகளும் அவர்களின் குடும்பத்தாரும் சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள் அல்லது வேறு படுத்திப் பார்க்கப்படுகிறார்கள். மற்றும் தவறாகவும் புரிந்து கொள்ளப் படுகிறார்கள். இந்த விருது என்பது ஒரு பெரிய மாற்றத்துக்கான சிறிய துவக்கமே. சிறிய துவக்கம் என்றாலும் சிறப்புக் குழந்தைகளைக் கை விடாமல் அவர்களை வளர்த்து ஆளாக்கும் குடும்பங்களின் தன்னம்பிக்கை அவர்களின் பாசம் தைரியம் இவைகளை வெளிச்சத்துக்கு கொண்டு வரும் ஒரு மிகப்பெரிய முயற்சி இந்த சிறப்பு அன்னையருக்கான விருது.சமூகத்தால் கவனிக்கப்படாத ஹீரோக்களாக வலம் வரும் சிறப்பு அன்னையரையும் அவரது குடும்பத்தினரையும் அவர்கள் செய்யும் தியாங்களையும் மக்களுக்கு எடுத்துச் சொல்லும் வழியாகத்தான் ஸ்ரீ அருணோதயம் இந்த விருதினை ஏற்படுத்தியுள்ளது. இந்த விருதினைப் பெற்ற அன்னையர் சுய நலமும் பணமுமே முக்கியமாக இருக்கும் இந்த சமூகத்துக்கு உண்மையான குடும்ப பாசம், தியாகம் அன்பு இவற்றை எடுத்துச் சொல்லும் உருவகங்களாகவும் வழிகாட்டிகளாகவும் நிச்சயம் இருப்பார்கள்.

ஸ்ரீ அருணோதயம் அறக்கட்டளையைப் பற்றி:

ஸ்ரீ அருணோதயம் அறக்கட்டளை என்பது சமூகத்தால் கை விடப்பட்ட மூளைத்திறம் பாதிப்படைந்த குழந்தைகளின் இல்லம். இது சென்னை கொளத்தூரில் இயங்குகிறது. கடந்த 16 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த இல்லம் சிறப்புக்குழந்தைகளுக்கு பாதுக்காப்பான நல்ல இருப்பிடமாக விளங்குகிறது. இங்கு வளரும் குழந்தைகளில் முக்கால்வாசிப் பேர் பொது இடங்களான பேருந்து நிலையம், ரயில்வே ஸ்டேஷன் இன்னும் சொல்லப்போனால் குப்பைத்தொட்டிகளில் கூட கவனிப்பாரற்று இருந்தவர்கள். இந்த இல்லம், அரசு நிறுவங்களான சமூக நலத்துறை, காவல் துறை, தன்னார்வ திண்டு நிறுவனங்களான குழந்தை நல அமைப்புகள் மற்றும் சைல்ட் ஹெல்ப் லைன் ஆகியவற்றோடு இணைந்து இத்தைய குழந்தைகளை பராமரிக்கும் சேவையை செய்து வருகிறது. ஸ்ரீ அருணோதயம் இக்குழந்தைகளுக்கு அவர்கள் இழந்த வீட்டையும் ஒரு நல்ல குடும்பத்தையும் அளிக்க முழு முயற்சி செய்து வருகிறது.

தொடர்புக்கு:

திரு. ஐயப்பன் சுப்பிரமணியன் (நிறுவனர் மற்றும் மேனேஜிங் டிரஸ்டீ)

தொலைபேசி : +91 9444915803

மின்னஞ்சல் - iyyappan@sriarunodayam.org <mailto:iyyappan@sriarunodayam.org>

அல்திய டிசில்வா (மேலாளர் - தகவல் தொடர்பு)

தொலைபேசி : +91 9840350120

மின்னஞ்சல் - althea.dsylva007@gmail.com <mailto:althea.dsylva007@gmail.com>